# BIS Conducts Enforcement Raids – Confiscates 19000 LED Products

Bureau of Indian Standards, Southern Regional Office conducted enforcement raids on 1 March 2021. Four teams from the Chennai branch offices conducted enforcement raids at 6 different locations in and around Chennai based on complaints received regarding misuse of the BIS Registration mark on LED Products. Cases of misuse of BIS Registration mark were detected and a huge haul of around 19000 numbers of LED Products pertaining to different brands was found and seized by the enforcement teams.

Head, Chennai Branch Office I, Smt. G. Bhavani, informed that such raids are being conducted in and around Chennai regularly. All such cases of misuse detected are suitably dealt as per BIS Act, 2016.

She further informed that BIS has launched a new android based app called "BIS CARE" wherein the information about BIS licensees like name, address including validity and varieties covered can be viewed. The App can be downloaded on mobile phone and the product details can be verified immediately. The App provides facility to register complaints also. She advised the general public to give information about any misuse of BIS licenses which comes to their notice.

## 19 ஆயிரம் எல்.இ.டி., பொருட்கள் பறிமுதல்

**சென்னை, மார்ச் 3–**

பி.ஐ.எஸ்., தர விதிகளை தவறாக பயன்படுத்தி விற்பனை செய்யப்பட்ட, 19 ஆயிரம் எல்.இ.டி., பொருட்களை, இந்திய தர நிர்ணய அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

இது குறித்து, இந்திய தர நிர்ணய, தெற்கு மண்டல துணை இயக்குனர் ஹெச்.அஜய் கண்ணா வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சென்னை மற்றும் சென்னையை சுற்றியுள்ள பகுதிகளில், இந்திய தர நிர்ணய விதிகளையும், ஐ.எஸ்.ஐ., தர முத்திரையை தவறாக பயன்படுத்துவதாக தகவல் கிடைத்தது.

இதையடுத்து, இந்திய தர நிர்ணய தெற்கு மண்டல தலைவர் பிரசாத் ராவ் ஆலோசனை படி, சென்னை மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள ஆறு பகுதிகளில், நான்கு குழுவினர் சோதனையில் ஈடுபட்டனர்.

அதில், பல்வேறு நிறுவனங்களின் பெயரில், எல்.இ.டி., பொருட்களில், ஐ.எஸ்.ஐ., முத்திரையை தவறாக பயன்படுத்தியும், இந்திய தர நிர்ணய விதிகளை மீறியதும் தெரிய வந்தது. இதையடுத்து, ஐ.எஸ்.ஐ., முத்திரையை தவறாக பயன்படுத்திய, 19 ஆயிரம் எல்.இ.டி., பொருட்களை, இந்திய தர நிர்ணய அமலாக்க அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

இந்திய தர நிர்ணய சட்டம், 2016ன் படி, சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இந்திய தர நிர்ணயத்தால் வழங்கப்பட்ட ஐ.ஐ.எஸ்., முத்திரை, அதன் பதிவு எண் உட்பட, பல்வேறு தகவல்களை நுகர்வோர் அறிந்து கொள்வதற்காக, 'பி.ஐ.எஸ்., கேர்' என்ற மொபைல் செயலி உருவாக்கப்பட்டுள்ளது.

இதை பயன்படுத்தி, தவறாக பயன்படுத்தப்படும் ஐ.எஸ்.ஐ., முத்திரைகள் குறித்து, நுகர்வோர் புகார் அளிக்கலாம்.

இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

Dinamalar Dt 3 Mar 2021

## Sleuths confiscate 19,000 LED products misusing BIS mark

TIMES NEWS NETWORK

**Chennai:** Raids by sleuths of the Bureau of Indian Standards (BIS) on Monday unearthed sale of LED products that have been misusing its registration mark.

Four teams from the Chennai office raided six different locations in and around Chennai based on complaints received. Around 19,000 LED products of different brands were found and seized by the enforcement teams.

Times of India Dt 3 Mar 2021

போலியான தரச்சான்று முத்திரை:

## 19 ஆயிரம் எல்.இ.டி. பொருட்கள் பறிமுதல்

சென்னை, மார்ச்.3–

இந்திய தர நிர்ணய அமைவனத்தின் (பி.ஐ.எஸ்.) தென் மண்டல அலுவலகத்துக்கு, சில நிறுவனங்களின் எல்.இ.டி. தயாரிப்புகளில் போலியாக தர நிர்ணய முத்திரை பதிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக ஏராளமான புகார்கள் வந்தது. இதையடுத்து, இந்திய தர நிர்ணய அமைவனத்தின் தென் மண்டல தலைமை அதிகாரி எம்.வி.எஸ்.டி.பிரசாத ராவ் உத்தரவின் பேரில், சென்னை கிளையின் தலைமை அதிகாரி ஜி.பவானி தலைமையில் அதிகாரிகள் 4 குழுவினர் சென்னையில் உள்ள 6 இடங்களில் சோதனை நடத்தினர். இந்த சோதனையில் வெவ்வேறு நிறுவனங்களின் பெயரில் இந்திய தர நிர்ணய அமைவனத்தின் முத்திரையை போலியாக பயன்படுத்தி, விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த 19 ஆயிரம் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதுபோன்ற சோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ள சென்னை கிளை தலைமை அதிகாரி பவானிக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

'பிஸ் கேர்' என்ற செயலியை இந்திய தர நிர்ணய அமைவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. பொதுமக்கள் இந்த செயலியின் மூலமாகவும் இந்திய தர நிர்ணய அமைவனத்தின் முத்திரையை போலியாக பயன்படுத்துபவர்கள் தொடர்பான புகார்களை தெரிவிக்கலாம்.

மேற்கண்ட தகவல் இந்திய தர நிர்ணய அமைவனத்தின் நுகர்வோர் விவகார துறையின் துணை இயக்குனர் எச்.அஜய் கண்ணா வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

Dinamalar Dt 3 Mar 2021